செ.வெ.எண்:05 நாள்:02.02.2018

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் மிகை முன்னோடி மாநிலமாக உருவாக்கும் நோக்குடன் முதலீட்டாளர்கள் எளிதாக தொழில் தொடங்க வழிவகை செய்யும் பொருட்டு தமிழக அரசு, **“ தமிழ்நாடு வணிக வசதியாக்கல் சட்டம் – 2017”** – ஐ இயற்றியுள்ளது.

இச்சட்டத்தில் தொழிற்சாலை துவங்க உரிமம் பெற வேண்டிய துறைகளான தீயணைப்பு துறை, பொது சுகாதாரத் துறை, மின்வாரியத்துறை மற்றும் பிற சம்பந்தப்பட்ட துறைகளிலும் எளிதாக உரிமங்கள் மற்றும் ஒப்புதலை பெறுவதற்கு ஆவண செய்யப்பட்டுள்ளது.

புதியதாக தொழில் தொடங்குவோர் மற்றும் தொழில் விரிவாக்கம் செய்ய விரும்பும் தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனத்தின் வரைபடங்களுடன், உரிய ஆவணங்களை **www.easybusiness.tn.gov.in** என்ற இணைய தளத்தில் விண்ணப்பம் ( பதிவேற்றம் ) செய்து உரிய உரிமங்கள் பெறலாம்.

**கரூர்** மாவட்டத்தில், தொழில் முனைவோர்களுக்கு உடனடி உரிமங்கள் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, **மாவட்ட ஆட்சியர்** அவர்களின் தலைமையின் கீழ் **ஒருமுனை தீர்வு குழுவானது** 21.12.2017 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு மாதம் இருமுறை கூடி உரிமம் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளும்.

எனவே, கரூர் மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோர்கள் **“ தமிழ்நாடு வணிக வசதியாக்கல் சட்டத்தின்”** கீழ் உரிமங்கள் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், கரூர் அவர்களை அணுகலாம்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.